
# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com


வேதாகமத்தின் 66 புத்தகங்களில் எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வு உள்ளது. தேவ பிள்ளைகள் அதை இரவும் பகலும் வாசித்து மெய்யான இளைப்பாறுதலையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்கின்றனர். கூடுதலாக, செய்திகளை தங்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டு, பதிலுக்கும் ஆசீர்வாதத்திற்குமான சூத்திரங்களை கற்றுக்கொள்கின்றனர். விசுவாசிகள் வேதாகமத்தின்மூலம் தேவனிடம் வரும்போது ஆவியானவரின் கிரியைகளை அனுபவிக்கின்றனர். (இடமிருந்து, சகோதரர் ஃகைபெர்ட் ஹோமி, கண்காணியை எஸ்தர் வான்ஸிரு, ஜொங்சு சியோ; வலமிருந்து மேல் கண்காணியை யுன்சில் லீ, சகோதரர் சுரேஷ் நேக்டர், மூத்த கண்காணியை ஹின்மி காங்)

# சுகமும், மாற்றமும், ஆசீர்வாதங்களும் பரிசுத்த வேதாகமத்தில் உள்ளன

## 2016ல் மான்மின் அங்கத்தினர்கள் வசனத்தின் வல்லமையை பிடித்துக்கொள்கின்றனர்

வேதாகமம் ஒளியாய் இருக்கிற தேவனிடமிருந்து வந்த அன்பின் கடிதமாகும். அது நித்திய வாழ்விற்கான வழியையும், அனைத்து பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான திறவுகோலையும், வாழ்க்கைக்குரிய முடிவில்லாத ஞானத்தையும் கொண்டுள்ளது.

இதுவரை இல்லாத அளவிற்கு 2016ல் மான்மின் அங்கத்தினர்கள் பூரண ஆவியின் ஓட்டத்தில் இணைந்துச் செல்லவும், மூன்றாம் கட்ட ஊழியத்தில் முக்கிய பங்காற்றுவதற்காக மாறவும் வேதாகமத்தில் கவனம் செலுத்தி வருகின்றனர். அவர்களில் அநேகர் வேதாகமத்தை வாசித்தபோது, ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டனர். அவர்கள் தங்கள் சாட்சிகளைப் பகிர்ந்து கொண்டனர்.

ஒளியும் உப்பும் குழுவைச் சார்ந்த கண்காணியை யுன்சில் லீ, வயது 44, சொன்னதாவது, “வேதாகமத்தில் இஸ்ரவேல் ராஜாக்களின் வெற்றி, தோல்வி, எழுச்சி மற்றும் வீழ்ச்சி எழுதப்பட்டுள்ளது. அதை வாசிக்கையில், தேவனுடைய இதமான அன்பை உணர்ந்தேன். அவர்கள் தவறு செய்தாலும், அவர்கள் மனந்திரும்பியபோது, தேவன் அவர்களை மன்னித்து, அரவணைத்து கொண்டார்; அவர் அன்பு நிறைந்தவராய் இருந்தார். என் அப்பாவின்மேல் நான் உணர்ந்த பயத்தை என்னால் அகற்ற முடிந்தது. என்னை இரட்சித்த கர்த்தரின் அன்புக்காக நான் அதிக நன்றியின் உணர்வோடு இருக்கிறேன். மேலும் பிறருக்கு நான் பணிவிடை செய்யும்போது இறுமாப்போடு செய்கிறேன் என்பதை அறிந்துகொண்டேன். அதைக்குறித்து நான் முற்றிலும் மனந்திரும்பிவிட்டேன்.” அவள் தன் இருதயத்தில் இருந்த தீமையிலிருந்து குணமடைந்து மனந்திரும்பியதால் தற்போது ஒரு புதிய கிறிஸ்தவ வாழ்க்கையை வாழத் தொடங்கியிருப்பதாக உணருகிறாள் (படம் 4).

இந்தியாவிலுள்ள டெல்லி மான்மின் சபையை சேர்ந்த சகோதரர் சுரேஷ் நேக்டர், வயது 30, ஒரு கனவைக் கண்டார். அந்த கனவில், தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ தோன்றி, “வேதாகமத்தின் பழைய மற்றும் புதிய ஏற்பாட்டை வாசி” என்று சொன்னார். அவர் அதை ஒருமுறை வாசித்தப் பிறகு, கைக்குட்டை ஜெபத்தின்மூலமாக (அப்போஸ்தலர் 19:11–12) சிறுநீரக கல் பிரச்சனையிலிருந்து அவர் குணமானார். தற்போது அவர் சபையில் இந்தியில் மொழியாக்கம் செய்யும் வேலையின்மூலம், தேவ ராஜ்யத்திற்காக தன்னை அர்ப்பணித்துள்ளார் (படம் 5).

அநேக பணித்தளங்களும், குழுக்களும் தங்களுக்கென வேத வாசிப்பு திட்டங்களை உருவாக்கி, மற்ற சகோதர சகோதரிகளுடன் இணைந்து விசுவாசத்தில் வளருவதற்காக முயற்சிக்கின்றனர். ஜெப அர்ப்பணிப்பாளர்கள் குழுவில் ஒரு உறுப்பினரான 50 வயதான மூத்த கண்காணியை ஹின்மி காங் சொன்னதாவது, “ஆவிக்குரிய உலகம் மற்றும் மறு–சிருஷ்டிப்பின் வல்லமை போன்ற வேதாகமத்தில் உள்ள கிரியைகள் மான்மின் ஊழியத்திலும் நிகழ்வதை நான் கண்டறிந்தபோது, சிலிர்த்துப் போய்விட்டேன். வெளிப்படுத்தின விசேஷத்தில் புதிய எருசலேமைப் பற்றி நான் வாசித்தபோது, நான் உணர்ச்சி மிகுதியால் நிரப்பப்பட்டேன்.” மேலும் அவள் ஜெபத்தின் வல்லமையைப் பெற்று, முழங்கால் மூட்டு வலியிலிருந்து குணமடைந்ததாகவும் சொன்னாள் (படம் 6).

கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை வாசிக்கிறது இயல்பான ஒன்றுதான். எனினும், அதை வாசிக்கையில் அங்கத்தினர்கள் சுகத்தையும், பதில்களையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்கிறார்கள். மேலும் அவர்கள் தேவனுடைய அன்பை அனுபவிக்கிறார்கள்.

க்வாஞ்சு மான்மின் சபையைச் சேர்ந்த கண்காணி ஜொங்சு சியோ, வயது 56, வேதாகமத்தை வாசித்து, அதை எழுதினபோது கண் வலியிலிருந்து குணமடைந்தார். மேலும் அவர் தன்னுடைய வேலை ஸ்தலத்தில் பதவி உயர்வைப் பெற்றுக்கொண்டார், அவருடைய பிள்ளைகளும் புதிதாக்கப்பட்டிருக்கிறார்கள் (படம் 3). வேதாகமத்தை வாசிக்கையில், கண்காணியை எஸ்தர் வான்ஸிரு, வயது 55 கண் வலி, கண் உறுத்தல், கண்ணீர் மற்றும் முதுகு வலியிலிருந்து குணமடைந்தாள் (படம் 2).

பெல்ஜியம், ஹய்னட் மான்மின் சபையைச் சார்ந்த சகோதரர் ஃகைபெர்ட் ஹோமி, வயது 63, (படம் 1) அறிவர். லீ அவர்களின் ஜெபத்தின்மூலமாக நீரிழிவு நோயிலிருந்து குணமானார். ஒவ்வொரு நாள் படுக்கைக்குச் செல்வதற்கு முன்பும் அவர் வேதாகமத்தை வாசிக்கிறார். அவர் சொன்னதாவது, “வேதாகமத்தில் உள்ளதைப் போன்ற அதே சம்பவங்களை என்னுடைய நிஜ வாழ்க்கையிலும் நான் அனுபவிக்கிறேன். நான் தியானிக்கிற வேதாகமத்தை நினைவுகூர்ந்து அவைகளை நான் மேற்கொள்கிறேன்.”

அநேக விசுவாசிகள் அறிவர். லீ அவர்களுடைய புத்தகங்களை வாசிக்கிறார்கள், அவைகள் வாசகர்கள் நன்றாகப் புரிந்து கொள்ளும்படி வேதாகமத்தை தெளிவாய் விவரிக்கின்றன. மேலும், வேத வசனங்களை மனப்பாடம் செய்கின்றனர். சபையின் வாராந்திர குறிப்பேட்டின் கடைசிப் பக்கத்தில் வாராந்திர மனன வேத வசனங்கள் உள்ளன. அவர்கள் அதில் உள்ள வசனத்தை ஒரு நாளுக்கு ஒன்று என மனப்பாடம் செய்கின்றனர். அந்த வசனங்ளின் அடிப்படையில், 2001 முதற்கொண்டு வேத வினாவிடை போட்டி நடைபெற்று கொண்டு வருகிறது.

வார்த்தை தேவனாயிருக்கிறது (யோவான் 1:1). மேலும், தேவவசனம் கிறிஸ்தவர்கள் கட்டாயம் வைத்துக்கொள்ளக்கூடிய பரிசுத்த ஆவியின் பட்டயமாக இருக்கின்றது (எபேசியர் 6:17). வசனத்தில், அவர்கள் தேவனை உணர முடிகிறது, சந்திக்க முடிகிறது; அவருடைய சாயலை கண்டறிந்து, அதை அடையவும் முடிகிறது. பாவத்தினால் நிறைந்துள்ள உலகத்தை மேற்கொண்டு, உலகத்திற்கு ஒளியாகவும் உப்பாகவும் மாறுவதற்கு, அவர்கள் தங்களுடைய இருதயத்தில் வசனத்தை வைத்திருக்கிறார்கள்.

# ஆண்டவரை விசுவாசிப்பதென்றால் என்ன?



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

"அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்."
(எபிரெயர் 12:2)

ஆண்டவரை விசுவாசிப்பதென்பது நேரடியாக இரட்சிப்போடு சம்பந்தப்பட்டிருக்கிறது, ஆனால் இன்று அநேகர் "ஆண்டவரை விசுவாசிப்பது" என்றால் என்ன என்பதின் அர்த்தத்தை அறியாதிருக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகள் ஏன் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே நம்முடைய இரட்சகராய் இருக்கிறார் என்பதையும், இயேசுவை இரட்சகராக விசுவாசிப்பதென்றால் என்ன என்பதையும் புரிந்துக்கொள்ள வேண்டும். இதனை புரிந்துக்கொள்வதால், நாம் ஆண்டவரில் பூரண விசுவாசத்தை அடைந்து தேவனுடைய வல்லமையை அனுபவிக்கலாம்.

### 1. காலத் துவக்கத்திற்கு முன்பிலிருந்தே மனுக்குலத்திற்கான இரட்சிப்பின் வழி ஆயத்தமாக்கப்பட்டிருந்தது

சில மக்கள் இயேசுவை உலகத்தின் புனிதர்கள் சிலரில் ஒருவராக மட்டுமே நினைக்கின்றனர், ஆனால் அவர் மனிதனுடைய அந்தஸ்துக்குச் சமானமானவர் அல்ல. அப்படியானால் இயேசு யார்?

மத்தேயு 16ல், இந்தக் கேள்விக்குப் பல்வேறு வித்தியாசமான பிரதியுத்திரங்கள் இருந்தன. சிலர் அவரை யோவான் ஸ்நானகன் என்றும், வேறுசிலர் அவரை எலியா என்றும் கூறினர். இன்னும் சிலர் எரேமியா போன்ற தீர்க்கதரிசிகளில் அவர் ஒருவர் என்றும் நினைத்தனர். ஆனால் பேதுரு அவரிடம், "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்றான். இயேசு பிரதியுத்திரமாக பாராட்டுதலின் வார்த்தையோடு, "...மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்" என்று கூறினார். இயேசுவால் நிகழ்த்தப்பட்ட வல்லமையான கிரியைகள் பலவற்றை கண்ட பேதுரு அவரை சிருஷ்டிகராகிய தேவனுடைய குமாரன் என்றும், மனுக்குலம் அனைத்தையும் இரட்சிக்கப்போகும் கிறிஸ்து என்றும் அறிந்து உணர்ந்தான். பின், சிருஷ்டிகராகிய தேவனோடு ஒன்றாய் இருந்த இயேசு ஏன் மனித அவதாரம் எடுத்து இந்தப் பூமிக்கு இறங்கி வந்தார்? அதன் காரணமும், பதிலும் தேவனுடைய ஆழமான அன்பிலும் அவரது ஆச்சர்யமான அநாதி திட்டத்திலும் அடங்கியுள்ளது.

ஆதியிலே, தேவன் முதல் மனிதனாகிய ஆதாமை சிருஷ்டித்து அவனிடத்தில், "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்; அதை நீ புசிக்கும்நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்." ஆனால் அவன் தேவனுடைய வார்த்தையை தன் இருதயத்தில் வைத்து வைக்கவில்லை. சர்ப்பத்தின் சோதனையால் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்திலிருந்துப் புசித்தான். அதன் விளைவாக, பாவம் அவனுக்குள் வந்தது. அப்போதிருந்து மனுக்குலம் அனைத்தும் அவனது பாவ சுபாவத்தை சுதந்தரித்திருக்கின்றனர். இந்தப் பாவத்தினால் அவர்கள் அனைவரும் நித்திய மரணத்திற்கு ஆக்கினைத் தீர்ப்படைந்தனர்.

எப்படியாயினும், மனுமக்கள் அனைவருக்காகவும், தேவன் காலத் துவக்கத்திற்கு முன்னே இரட்சிப்பின் வழியை ஆயத்தம் செய்து அதை மறைத்து வைத்தார். அந்த வழி இயேசு கிறிஸ்து. முதல் மனிதனாகிய ஆதாம் பாவம் செய்து மரணத்தின் வழிக்குச் செல்வான் என்பதை அவர் முன்னறிந்திருந்தார். அதனால் அவர் மனிதனை சிருஷ்டிப்பதற்கு முன்னமே அவர் மனுக்குலம் அனைத்திற்காகவும், இரட்சிப்பின் வழியை ஆயத்தம் செய்தார் (1கொரிந்தியர் 2:6–8).

### 2. இரட்சகராவதற்குரிய நான்கு தகுதிகள்

இரட்சிப்படைவதற்கு நாம் ஏன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும்?

அப். 4:12ல், "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என வாசிக்கிறோம். இந்த வசனத்தின் அர்த்தம் என்ன என்பதை நாம் நம்முடைய இருதயத்திலிருந்து புரிந்துக் கொள்ள வேண்டியது நமக்கு மிகவும் அவசியம். அனைத்து தேசங்களும் தங்களுக்கென சுய சட்டங்கள் உடையதாய் இருக்கின்றன. அந்தச் சட்டங்களினால் அத்தேசத்தின் ஒழுங்கு நிர்வாகிக்கப்படுகிறது. இதே போலத்தான் ஆவிக்குரிய உலகமும், அதன் சட்டத்தைக் கொண்டிருக்கிறது. அந்தச் சட்டத்தின்படி, மனிதர்களுடைய பாவப் பிரச்சனை தீரும்போது தான் அவர்கள் இரட்சிக்கப் படமுடியும். அப்படியானால், யார் இந்த பிரச்சனையை தீர்க்கக்கூடும்? பாவ பிரச்சனையை தீர்க்கக்கூடிய இரட்சகருக்கு உரிய தகுதிகளை நாம் பார்ப்போம்.

#### முதலாவது, இரட்சகர் மனிதனாய் இருக்க வேண்டும்.

லேவியராகமம் 25:25ல், "உங்கள் சகோதரன் தரித்திரப்பட்டு, தன் காணியாட்சியிலே சிலதை விற்றால், அவன் இனத்தான் ஒருவன் வந்து, தன் சகோதரன் விற்றதை மீட்கக்கடவன்" என்று சொல்கிறது. பாவம் செய்ததால் ஆதாம் சாத்தானிடம் கையளித்த அதிகாரத்தை திரும்பப் பெறுவதற்கு அந்தக் காணியாட்சியின் மீட்பர் ஆதாமுக்கு இனத்தானான மனிதனாய் இருக்க வேண்டும். 1கொரிந்தியர் 15:21, "மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று" என்று கூறுகிறது. ஆதாமை குறிப்பிட்டு மரணம் ஒரு மனுஷனால் வந்தது, ஒரு மனிதனால் மட்டுமே தான் நம்முடைய மரித்த ஆவிகளும்கூட உயிர்ப்பிக்கப்பட முடியும் என்பதே இதன் அர்த்தமாகும். இயேசு மனித அவதாரம் எடுத்து இந்த உலகத்திற்கு வந்தார், அதனால் அவர் முதல் தகுதியுடையவரானார் (யோவான் 1:14).

#### இரண்டாவது, அவர் ஆதாமின் சந்ததியாக இருக்கக்கூடாது.

மனிதர்களை பாவங்களிலிருந்து மீட்பதற்கு, அவர் பாவியாக இருக்கக்கூடாது. ஆனால் ஆதாமின் மீறுதலினால், அவனுடைய சந்ததியினர் அனைவரும் பாவிகளானார்கள். ஆக, ஆதாமின் சந்ததியினர் இந்த இரண்டாம் தகுதியை சந்திக்கவில்லை. இருப்பினும், இயேசுவானவர் பரிசுத்த ஆவியினால் உற்பவிக்கப்பட்டார். ஒரு விந்து மற்றும் ஒரு முட்டை சினைவதின் மூலமாக அல்ல, கன்னி மரியாளின் கர்ப்பம் 'கடனாக வாங்கப்பட்டது' (மத்தேயு 1:18). அதனால் இயேசு ஆதாமின் சந்ததியிலானவர் அல்ல, அவரிடத்தில் எந்த ஒரு பாவமும் இல்லை.

#### மூன்றாவது, அவருக்குப் பெலன் இருக்க வேண்டும்.

ஒரு மனிதன், தரித்திரப்பட்டு நிலத்தை விற்ற தன் சகோதரனுடைய நிலத்தைத் திருப்ப வேண்டுமேயானால், அதை மீட்கும் உறவினன் ஐசுவரியவானாகவும், அதைத் மீட்பதற்கு பெலனுள்ளவனுமாய் இருக்க வேண்டும் (லேவி. 25:26–27). தன் சகோதரனுக்காக அவன் நிலத்தைத் திருப்ப வேண்டும் என்று எத்தனை ஊக்கமாக விரும்பினாலும், அதை மீட்டுக்கொள்ள அவனிடத்தில் பெலன் இல்லையானால், அவனால் கடனை திரும்பச் செலுத்த இயலாது. ஆவிக்குரிய உலகில் பாவமில்லாமை தான் வல்லமையும் பெலனுமாயிருக்கிறது. இயேசு ஆதாமின் சந்ததி அல்ல, அதனால் அவரிடத்தில் பெற்றோர் மூலமாய் பெறப்படுகிற ஜென்ம பாவமில்லை. அவர் பாவம் செய்யவே இல்லை. ஆக, அவரால் பொல்லாத வல்லமைகளின் அதிகாரத்தைத் தோற்கடித்து, மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழ முடிந்தது.

#### நான்காவது, அவருக்கு அன்பு இருக்க வேண்டும்.

ஒரு மனிதன் முந்தைய மூன்று தகுதிகளை சந்தித்தாலும், மனுக்குலத்தின் மேல் அவனுக்கு அன்பில்லையானால் மனிதர்களின் பாவங்களில் இருந்து அவர்களை அவனால் மீட்க முடியாது. ஐசுவரியமுள்ளவனாயிருந்தாலும் தன் சகோதரன் பேரில் அன்பில்லையானால் தன் சகோதரனுக்கு அந்த மனிதன் உதவமாட்டான். இயேசுவுக்கு அன்பு இராதிருந்தால், அவர் சிலுவையின் பாடுகளை ஏற்றிருந்திருக்கமாட்டார். இருப்பினும், அவர் தம் ஜீவனையும் நமக்காக கொடுக்கக்கூடிய அளவில் அவர் நம்மை மிகவும் அதிகமாய் நேசித்தார். நமக்கான அவர் அன்புதான் அவர் சிலுவையை ஏற்றுக்கொண்டு, இரத்தம் சிந்தி, நமக்காக மரித்ததன் காரணம்.

கலாத்தியர் 3:13 சொல்கிறது, "மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்." நியாயப்பிரமாணத்தினால் உண்டான மரணம் என்னும் சாபத்திலிருந்து நம்மை மீட்க இயேசு மரச் சிலுவையிலே நமக்காக மரித்தார்.

லேவியராகமம் 17:11, "...ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே." எபிரெயர் 9:22 சொல்கிறது, "நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." கறை திரையற்ற பழுதற்ற அவரது விலையேறப்பெற்ற இரத்தத்தை அவர் சிந்தியதால், நாம் பாவ மன்னிப்பு பெற்று நித்திய ஜீவனை பெறச் செய்தார்.

### 3. ஆண்டவரை விசுவாசிப்பதென்பது சத்தியத்தால் மாறுவதாகும்.

ஒரு மனிதன் இந்தச் சிலுவையின் அநாதி திட்டத்தை அறிந்து அதை இருதயத்தின் ஆழத்திலிருந்து விசுவாசித்து, தன் பாவத்தைக் களைந்துப்போட்டு, தேவனுடைய சித்தத்தில் வாழ்ந்தால், தேவனுடைய அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெறலாம் (யோவான் 14:23). இருப்பினும், சில மக்கள் பதில்களைப் பெறாது அவர்கள் ஆண்டவரை விசுவாசிக்கிறோம் என்று சொன்னாலும் பாடுகளிலும் பிரச்சனைகளிலும் வாழ்கிறார்கள். அது ஏன்?

இதன் காரணம் அவர்களுடைய நம்பிக்கை தேவனுடைய பார்வையில் சரியானதாக இல்லை. அவர்கள் பாவங்களை களைந்துப்போடுவதில்லை. அவர்கள் தேவனுடைய வார்த்தையை அறிந்திருந்தாலும் கூட சத்தியத்தால் மாறுவதில்லை. அவர்களில் சிலர் விசுவாசத்தின் அடிப்படையான பத்துக் கட்டளைகளைக் கைக்கொள்வதில்லை. அவர்கள் ஞாயிறு காலை ஆராதனைகளில் மட்டும் பங்குப்பெற்று தங்கள் சொந்த வழிகளில் சிற்றின்பம் அடைவார்கள் அல்லது ஞாயிறு மாலை ஆராதனைகளைக் கூட தவிர்ப்பார்கள். அவர்கள் தசமபாகம் விஷயத்தில் கஞ்சத்தனமாக இருப்பதால் அவர்கள் தசம பாகத்தின் ஒரு பகுதியை மட்டுமே கொடுப்பர் அல்லது தசமபாகமே அவர்கள் தரமாட்டார்கள். இது தேவனுடையதை திருடுவதாகும் (மல்கியா 3:8). இப்படிச் செய்தால் அவர்களால் எப்படித் தேவனிடத்திலிருந்து ஆசீர்வாதத்தை எதிர்பார்க்கக்கூடும்! சிலர் அவிசுவாசிகளிலிருந்து சற்றும் மாறுபடாது, தேவனுக்கு விரோதமாய் முறுமுறுப்பர், குறைகளைச் சொல்வர்.

நாம் உண்மையில் ஆண்டவரை விசுவாசித்தால், நாம் தேவனுடைய சித்தத்தைப் பயிற்சி செய்ய வேண்டும். சகல வகையான தீமைகளையும் களைந்துப்போட வேண்டும். நமக்காக தம் ஜீவனை தந்த ஆண்டவரை பிரதிபலிக்க முயற்சிக்க வேண்டும். பிறர் நம்மை வெறுத்தாலும் நாம் அவர்களை மன்னித்து அவர்களை நேசிக்க வேண்டும். நாம் கோபம் கொள்ளாமல் சாந்தமாய் இருக்க வேண்டும். கெட்ட வார்த்தைகளுள்ள உதடுகள் நல்ல வார்த்தைகளுள்ள உதடுகளாய் மாற வேண்டும். நாம் முறுமுறுப்பதிலிருந்து எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ் செலுத்தக் கூடியவர்களாக மாற வேண்டும். நாம் பிறரை சந்தோஷிப்பிக்கக்கூடிய அழகான மக்களாக மாற வேண்டும். நாம் தீமைகளை களைந்து சத்தியத்தால் மாறுவதே தேவனிடத்திலிருந்து விசுவாசத்தினால் ஆசீர்வாதங்களையும், பதில்களையும் பெறுவதற்கான எளிய வழி.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டவருடைய இருதயத்தை நீங்கள் அடையப் பெற்றால் நீங்கள் ஜெபிக்கிற எதற்கானாலும் ஆசீர்வாதங்களையும் பதில்களையும் பெற முடியும். ஆண்டவரை விசுவாசித்து தேவனுடைய வார்த்தையில் வாழ்வதால் நீங்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை அனுபவித்து, எப்போதும் ஆசீர்வாதங்களையும் பதில்களையும் பெற வேண்டும் என ஆண்டவருடைய நாமத்தில் ஜெபிக்கிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]

# அன்போடும் விசுவாசத்தோடும் நாம் ஆசீர்வாதங்களைப் பெற முடியும்

நாம் எந்தளவாய் ஆண்டவரை விசுவாசித்து தேவனுடைய சித்தத்தில் வாழ்கிறோமோ அந்தளவாய் நாம் ஆசீர்வாதங்களைப் பெற்று, தேவனுடைய பிள்ளைகள் என்ற அதிகாரத்தையும் பெறுவோம். 2016ல், எங்கும் நாம் தேவனுடைய பாதுகாப்பின்கீழ் தங்கி, தேவனிடத்தில் எதைக் கேட்கிறோமோ அதைப் பெற்று, அவர் மகா அன்பை உணருவோம்.

## “நான் விசுவாசத்தில் காரியங்களைப் பார்த்தபோது எனக்கு வந்த நெருக்கடி தொழில் வளர்ச்சியின் ஆசீர்வாதமாக மாறியது”

கண்காணி ஹியுநோ கிம், வயது 47, கிழக்கு க்வாங்ஜூ மான்மின் திருச்சபை, தென்கொரியா



கார் மறுசீர்படுத்தும் மையம் ஒன்றிற்காக நான் வேலை செய்து, எனது உத்தமமான பணிக்காக அதிகாரம் பெற்றிருந்தேன். ஆனால் நான் சம்பாதித்த தொகை ஒன்றும் பெரிதல்ல. அச்சமயத்தில், நம்முடைய ஆத்துமா செழித்தோங்குவதுபோல நாம் ஆசீர்வாதத்தைப் பெற முடியும் என்று சொல்கிற தேவனுடைய வார்த்தையை நினைத்து நான் எனது தொழிலைத் தொடங்கினேன்.

2007ல், நான் ஒரு இயந்திர சேவை மையத்தை எடுத்து, தேவனுடைய வார்த்தையின்படி நற்குணத்தைப் பின்பற்றவும், சரியான பாதையில் நடக்கவும் முயற்சித்தேன். நான் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்றேன். அநுதின வாடிக்கையாளர் எண்ணிக்கை அதிகரித்தது. எனது தசமபாகமும் பெருகியது.

இருப்பினும் 2013ல், என்னுடைய ஒப்பந்ததாரர் ஒருவர் பணமோசடியானார், அது என் தொழிலை அதிகம் பாதித்தது. எனது தொழிலை மூடும் நெருக்கடியான நிலைக்குத் தள்ளப்பட்டேன். என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும், நான் அதிகமாக ஜெபித்தேன், அதிகமான சமாதானம் எனக்குள் வந்தது. தேவன் தம்முடைய வார்த்தையின்படி வாழும் பிள்ளைகளுக்கு நல்வழியை காண்பிப்பார் என்ற நிச்சயம் பெற்றேன்.

✦✦✦

எல்லாவற்றையும் சர்வ வல்லமையுள்ள தேவனிடம் ஒப்புவித்தேன், எப்போதெல்லாம் பிரச்சனைகளைச் சந்தித்தேனோ அப்போதெல்லாம் நான் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களிடம் சென்று அவைகளைத் தீர்த்தேன். இதற்கிடையில் ஜனவரி 2014ல், பிரச்சனைகள் அனைத்தும் தீர்ந்தன. நான் 3,305 சதுர அடி அளவு பெரியதான ஒரு மோட்டார் சேவை மையத்தை எடுத்துக் கொண்டேன்.

அன்பின் தேவன் நெருக்கடியான நிலையை ஆசீர்வாதமாக மாற்றி எல்லாம் நன்மையாக முடியப் பண்ணினார். எனது வாடிக்கையாளர்களை நான் திருப்திபடுத்தவும், எனது தொழிலாளிகளுக்கு உதவவும் முயற்சிக்கையில் நான் 2015ல் க்வாங் ஜூ பட்டண மேயரிடமிருந்து நல்ல சேவை மையத்திற்கான பாராட்டையும் பெறும்படி ஆசீர்வதிக்கப்பட்டேன். எல்லா நன்றியையும், மகிமையையும் தேவனுக்கே செலுத்துகிறேன்.

## “நான் தென்கொரியாவிற்கு சென்றபோதெல்லாம் தேவனுடைய சுகமாக்கும் வல்லமையை அனுபவித்தேன்”

சகோதரி பியன் ரோயன் லில்யன்
வயது 45, பிரான்சு



நான் மான்மின் மத்திய திருச்சபை உறுப்பினரானதிலிருந்து பல வியாதிகளிலிருந்து நான் சுகம் பெற்றுள்ளேன். ஜூன் 2014ல் நான் எனது தென்கொரிய பயணத்திலே அறிவர். ஜேராக் லீ அவர்களது கைகளை குலுக்கினேன். அதன் பிற்பாடு நான் செவிப்பறை கோளாறு, தோல் நோய், பல்ஈறு நோய் ஆகியவற்றிலிருந்து சுகம் பெற்றேன். ஆகஸ்ட் 2014ல், கோடை ஏகாந்தத்தின்போது, என்னை ஐந்து வருடங்களாக கஷ்டப்படுத்திய சுருள்சிரை நாளங்களிலிருந்து சுகம் பெற்றேன்.

அதே வருடம் நவம்பர் மாதம், எனது காதுகளுக்கு அடியிலுள்ள பாகங்கள் வீங்கி எனது தலை முடி வளரும் அடித்தோலில் அரிப்பை உணர்ந்தேன். பின் எனது தோல் பகுதி முழுவதும் கொப்புளங்களால் மூடப்பட்டது. மேலும் அதன் சில பகுதிகள் சிவந்த பக்குகளால் மூடப்பட்டது. இரத்தமும்கூட கசிந்தது. அது என் காதுகளின் அடிப் பகுதிகளுக்கும் பரவியது. அதுதோல் அரிப்பு அழற்சி.

நான் எனது வியாதிகளிலிருந்து ஏற்கனவே தேவனுடைய வல்லமையால் சுகத்தை அனுபவித்துள்ளேன். அதனால் அடுத்த மான்மின் கோடை ஏகாந்தத்தில் நான் மறுபடியும் சுகம் பெறுவதற்கு ஆயத்தமானேன். நான் ஜெபமும் நான் மாதம் ஒரு நேர உணவு உபவாசமும் ஏறெடுத்தேன்.

✦✦✦

ஆகஸ்டு 2015ல், நான் வாஞ்சித்துக் கொண்டிருந்த மான்மின் கோடை ஏகாந்தத்தில் பங்குப் பெறும்படி தென் கொரியாவிற்குச் சென்றேன். நான் அந்த கூட்ட இடத்திற்குப் போவதற்கு முன்னர், தலைமை போதகருடன் கைக் குலுக்கினேன். அடுத்த நாள் காலையில் தலைமுடி அடித் தோலிலிருந்த அரிப்பு எல்லாம் போய்விட்டது. ஆச்சரியம்! மேலும் ஏகாந்தத்தின் முதல் நாள் இரவு நான் கருத்தரங்கில் பங்கு பெற்றேன். தெய்வீக சுகமளிக்கும் கூட்டத்தில் நான் ஜெபத்தைப் பெற்றுக்கொண்டேன். அந்தக் கனப்பொழுதில், பரிசுத்த ஆவியின் அக்கினி என்மேலே இறங்கி வந்தது. எனது சரீரம் சூடாகியது. எனது காதுகளின் கீழ்ப்பகுதியில் சூடாக இருந்தது. அந்நேரத்திலிருந்து எனது தலைமுடியின் அடிப்பகுதிகளை மூடியிருந்த வெண்கொப்புளங்கள் உதிர ஆரம்பித்தன. மேலும் எனது தலைமுடியின் அடிப்பகுதி மற்றும் காதுகளின் கீழ் பகுதியில் இருந்த அனைத்து தோல் அரிப்பு அழற்சியும் சுகமாயின. ஹலேலூயா!

## “நான் ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகளிடமிருந்து பாதுகாக்கப்பட்டேன்”

சகோதரர் KB ராய், வயது 36
நேபாள் மான்மின் திருச்சபை



2007ல் சண்டையின் உச்சத்தை ஆப்கானிஸ்தான் யுத்தம் அடைந்தபோது, நான் அத்தேசத்தின் தலைநகரமான காபுலில் பணிபுரிந்து வந்தேன்.

நான் ஒவ்வொரு நாளும் காலை 10 மணிக்கு ஆப்கானில் NATO–வால் வழிநடத்தப்படும் பாதுகாப்பு பணியான சர்வதேச பாதுகாப்பு உதவிப்படையின் (ISAF) அலுவலகத்திற்குச் செல்வதுண்டு. ஒரு நாள் அங்கு மதியம் செல்லலாம் என நினைத்தேன். அதனால் நான் காலையில் அங்குச் செல்லவில்லை. இதற்கிடையில், நான் பெரிய விபத்தின் சத்தத்தைக் கேட்டேன். அது ISAF அலுவலகத்திலிருந்து கேட்டது, காரணம் தற்கொலைப்படை தீவிரவாதி அதன் பிரதான நுழைவிலுள்ள காரை தாக்கியதால் அந்த கட்டிடம் தரைமட்டமானது. அது பல இராணுவ வீரர்களின் உயிர்களை வாங்கியது.

என் மனைவியின் ஜெபத்திற்கு நன்றிகூறும்விதமாக, நான் அங்குச் செல்லாதபடி தேவன் என்னை சரியான நேரத்தில் உந்தினார். அவள் நேபாள் மான்மின் திருச்சபையில் பங்குப் பெறுகிறாள். இந்நிகழ்வுக்குப் பிற்பாடு, நான் என் தேசமான நேபாளத்திற்குத் திரும்பி வந்து, நேபாள் மான்மின் திருச்சபையில் பங்குப்பெற்று விசுவாசம் பெறலானேன்.

✦✦✦

பிற்பாடு, நேபாள அரசாங்க பரிந்துரையோடு, நான் தென் கொரியாவில் வேலைப் பெற்றேன். மே 2014 முதல், நான் க்யோங்நாம் மாகாணத்தில், ஹாப்ச்சியோனில் பணிபுரிகிறேன். பிப்ரவரி 2015ல், நான் தலைமை போதகருடன் கை குலுக்கிய பிற்பாடு, எனது சம்பளம் உயர்ந்தது. ஏப்ரலில் நான் தொலைத்திருந்த அயல் தேசத்தார் பதிவுச் சான்றிதழை ஒரே நாளில் திரும்பப் பெற்றேன். எல்லாம் நன்றாய் சென்றது. மேலும் அக்டோபரில் எனது சம்பளம் தலைமை போதகருடன் கைகுலுக்கிய பின் மீண்டுமாக உயர்ந்தது. 2015ல், 70% சம்பள உயர்வு பெற்றேன்.

தேவன் எனது தலைவரை உந்தி மிகப் பெரும் ஆசீர்வாதத்தை நான் பெறச் செய்தார். தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

## "என் ஆத்துமா செழிப்படைகிற ஆசீர்வாதத்தைப் பெற்றேன், பதவி உயர்வையும் அடைந்தேன்"

மூப்பர் ஜோங்கிக் ஜியோன், வயது 53, ஜியோங்னம் கியோசாங் காவல்துறை அலுவலகம், தென்கொரியா



பதவி உயர்வைப் பெறுவதற்கு அருகாமையில் வந்தும் நான் பதவி உயர்வைப் பெற தவறும்பொழுதெல்லாம், வருத்தத்தில் இருக்கிற என்னிடம் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ சொல்வது, "நீ ஆவிக்குள் வந்துவிட்டால் எல்லாம் கூடும்." ஒருவர் இருதயத்தைச் சுத்திகரித்து, கர்த்தரின் நல்லதும் அழகுமான இருதயத்தைப் பெறுவதே 'ஆவிக்குள் வருவதாகும்.'

2013 டிசம்பரில் நான் தேவ கிருபையினால் ஆவியின் இருதயத்தை அடையப் பெற்றேன். அது முதற்கொண்டு நான் வேலை செய்த அனைத்து துறைகளிலும் செயல்திறன் மதிப்பீட்டில் நல்ல மதிப்பெண்களைப் பெற்றுக் கொண்டேன். நான் பிறரை கருத்தில்கொண்டு நற்குணத்தோடும் அன்போடும் வேலை செய்ததால், பரத்திலிருந்து நான் கிருபையையும் பெலனையும் பெற்றுக்கொண்டேன். அதனால் சக பணியாளர்கள் தீர்க்க முடியாத அநேக வழக்குகளை நான் தீர்க்க முடிந்தது. மேலும் நான் கொடிய குற்றவாளிகளையும் மென்மையாக நடத்தினேன். சக பணியாளர்கள் தங்களுடைய தலைவனான என்னோடு நன்றாக ஒத்துழைத்தார்கள், அதனால் அனைத்து காரியங்களிலும் நாங்கள் ஒரு மனதோடு சிறந்த செயல்திறனை வெளிப்படுத்த முடிந்தது.

அவசரகால சூழ்நிலைகளில் எங்களின் உடனடி நடவடிக்கை, தயவுள்ள வார்த்தைகள், செயல்கள், மேலும் விபத்துக்களை நேர்த்தியாக கையாளும் முறை போன்றவற்றை கணக்கீடும் பாதுகாப்பு செயல்திறன் கணினி மதிப்பீட்டில் என்னுடைய குழு மிகச் சிறந்த செயலை வெளிப்படுத்தியது. நான் பெருமைக்குரிய சிறந்த காவல்துறையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன், அதனால் டிசம்பர் 2015ல் ஒரு காவல்துறை உயர்அதிகாரி என்னும் உயர்வைப் பெற்றேன். அது ஒரு விசேஷமான பதவிஉயர்வாகும். அல்லேலூயா!

17 வருடங்களுக்கு முன்பு ஜொக்கிசா கோவிலில் நடந்த கலவரத்தை அடக்கச் சென்றபோது நான் 15 மீட்டர் உயரமுள்ள ஏணி வண்டியிலிருந்து கீழே விழுந்தபோது சர்வ வல்லமையுள்ள தேவன் என்னைப் பாதுகாத்தார். மேலும் தேவன் என் ஆத்துமா செழிப்படைந்து, அனைத்தும் சுகமாய் நடக்கும்படியாக ஆசீர்வதித்தார். அன்பின் தேவனுக்கு நான் எல்லா நன்றிகளையும், மகிமையையும் செலுத்துகிறேன்.

## "கர்த்தருக்காக ஒரு தெளிவான இலக்கோடு நான் படித்துக்கொண்டிருக்கிறேன்"

சகோதரர் சியோக்ஜன் மூன், வயது 20, யொன்செய் பல்கலைக்கழகம், தென்கொரியா



நான் ஐந்து வயதாக இருந்தபோது, நிமோனியா காய்ச்சல் எனக்கு வந்தது. அது 42 செல்சியஸ் டிகிரியாக இருந்தது. என் பெற்றோர்கள் மான்மின் மத்திய சபையின் விசேஷித்த எழுப்புதல் கூட்டத்தில் கலந்து கொண்டதால், ஜெபத்தினால் நான் அதிலிருந்து குணமடைந்தேன்.

2006ல் நான் நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது, என் குடும்பம் அமெரிக்காவிற்கு இடம்பெயர்ந்தது. அங்கு அனைத்தும் எனக்கு விநோதமாக தென்பட்டது. இருந்தாலும் நான் தைரியமாக இருந்தேன், காரணம் தேவன் என்னோடுகூட இருந்தால் என்னால் அனைத்தையும் செய்ய முடியும் என்று நினைத்தேன். தைரியத்தோடு ஒவ்வொன்றையும் நான் கற்றுக் கொண்டதால், நான் பள்ளியில் மிகச் சிறந்த தரத்தைப் பெற்றேன். மேலும் நான் 2009 மற்றும் 2010ல் தொடர்ச்சியாக அதிபர் ஒபாமாவின் விருதைப் பெற்றேன். நான்கு வருடங்களுக்குப் பிறகு நான் எட்டாவது படித்துக் கொண்டிருந்தபோது, நான் சீனாவில் உள்ள சர்வதேசப் பள்ளிக்குச் சென்றேன்.

நான் சிறுவனாய் இருந்தபோதே என் பெற்றோர்கள், சபைக்கும் மேய்ப்பருக்கும் பெலனாய் இருக்கும்படியான ஒரு கனவை எனக்குள் விதைத்திருந்தனர். அதனால் ஒரு தெளிவான இலக்கோடு என்னால் படிக்க முடிந்தது. 2013ல், நான் தேவ அன்பை அனுபவித்தேன், எனவே தேவனுடைய வார்த்தையின்படி வாழவும், ஜெபிக்கவும் நான் கடினமாக முயற்சித்தேன். பிறகு, என்னால் நன்றாக படிக்க முடிந்தது. என் உயர்நிலைப் பள்ளி நாட்களில், நான் அறிவைப் பெருக்கும்படிக்கு அரசியல், பொருளாதாரம், அறிவியல், ஆங்கிலம், சீனம் போன்றவை உள்ளடங்கிய பல துறைகளில் படித்தேன். பட்டியலில் முதல் மாணவனாக நான் பட்டமும் பெற்றேன்.

2016ல், நான் யொன்செய் பல்கலைக்கழகத்தில் சேர்க்கைப் பெற்றேன். என் கல்லூரி வாழ்க்கையை நான் அரசியல் அறிவியலிலும், சர்வதேச ஆய்வுத் துறையிலும் ஆரம்பித்தேன். என் துறையில் நான் சிறந்த மாணவனாக இருக்க விரும்புகிறேன். மேலும் நான் தேவனுடைய அன்பை மான்மின் தூதுவராக அறிவிக்க விரும்புகிறேன். மிகவும் விலையேறப்பெற்ற சந்தோஷமான வாழ்க்கைக்கு என்னை வழிநடத்துகிற தேவனுக்கு நான் எல்லா நன்றிகளையும், மகிமையையும் செலுத்துகிறேன்.

## "இந்துவாக இருந்த என் குடும்பத்தினர் ஆண்டவரை சந்தித்து, எல்லா வியாதிகளிலிருந்தும் குணமாயினர்"

சகோதரி பப்பிதா, வயது 13, சென்னை மான்மின் சபை, இந்தியா

என்னுடைய சித்தி அறிவர். ஜேராக் லீ அவர்களின் 2006 நியூயார்க் ஒருங்கிணைந்த கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தபோது தன்னுடைய வியாதிகளிலிருந்து குணமானார்கள். அவர்களின் வழிநடத்துதலின்படி, என் குடும்பம் சென்னை மான்மின் சபையில் பங்குபெற தொடங்கியது. அதன்பிறகு, என் உறவினர் ஒருவர் 13 ஆண்டுகளாக அவரை கஷ்டப்படுத்திய அசுத்த ஆவியின் பீடியிலிருந்து விடுதலைப் பெற்றார். கன்றை ஈனும்பொழுது மரிக்கும் நிலையில் இருந்த தன்னுடைய மாட்டை மூவான் மதுர தண்ணீரை கொடுத்து என் பாட்டி உயிர்பெறச் செய்தார்கள் (யாத்திராகமம் 15:25).

2014 டிசம்பரில், என் தொண்டை வீங்கிவிட்டது. நான் உணவை சாப்பிட முடியாத அளவிற்கு அது வேதனையாக இருந்தது. என்னுடைய மருத்துவர் எனக்கு அடிநாக்கில் அழற்சி இருப்பதாகச் சொன்னார். மேலும், அதற்காக அறுவை சிகிச்சை செய்யலாமா வேண்டாமா என்பதை சோதித்தப் பிறகு தீர்மானிப்பேன் என்றும் கூறினார். நான் அந்த நேரத்தில் பயந்து போனேன். ஆனாலும், விசுவாசத்தினால் சுகத்தைப் பெற உடனே நான் தீர்மானித்தேன். நான் என்னுடைய கடந்தகால வாழ்க்கையை ஆராய்ந்துப் பார்த்து, மனந்திரும்ப தொடங்கினேன். பதிலைப் பெறுவதற்காக என் குடும்பத்தினர் ஒன்றாக சேர்ந்து, ஆராதனையை ஏறெடுத்து, ஜெபிக்கத் துவங்கினோம்.

2015 மே மாதத்தில், சபைக்கு அருகாமையில் இருக்கும் என்னுடைய சித்தி வீட்டிற்கு நான் இடம்பெயர்ந்து, அனைத்து ஆராதனைகளிலும் பங்குப் பெற்றேன். நான் பொருத்தனை ஜெபத்தையும் ஏறெடுத்தேன். கூடுதலாக, அறிவர். ஜேராக் லீ அவர்களின் சிலுவையின் செய்தி என்னும் புத்தகத்தை முழு இருதயத்துடன் வாசித்தேன். என் அம்மாவும்கூட நான் சுகத்தைப் பெறுவதற்காக 21 நாட்களுக்கு ஒரு வேளை உணவை அருந்தாமல் உபவாசம் ஏறெடுத்தார்கள்.



இந்துவாக இருந்த சகோதரி பப்பிதாவின் குடும்பத்தினர், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால், வல்லமையான கிரியைகளை அனுபவித்து, சந்தோஷமான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்கின்றனர். இடமிருந்து, அவள் சித்தி, பாட்டி, பப்பிதா, அவளுடைய அம்மா, தம்பி மற்றும் அக்கா.

நவம்பரில், மான்மின் உலக வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹீசன் லீ இந்தியாவிற்கு வந்தார். அறிவர். ஜேராக் லீ ஜெபித்த கைக்குட்டையை வைத்து (அப். 19:11–12) எனக்காக ஜெபித்தார்கள். பரிசுத்த ஆவியின் அக்கினி என்மேல் வந்ததால், என் சரீரம் அனலானது. நான் இருமியபோது மஞ்சள் நிற சளி இரத்தத்தோடு கலந்து வந்தது. பிறகு வலி முற்றிலும் மறைந்துப் போனது.

என் உறவினர் ஒருவர் அவருடைய கால் வலியிலிருந்தும், என் பாட்டி முதுகு வலியில் இருந்தும், என் தம்பி சிறுநீரக சம்பந்தப்பட்ட வியாதியிலிருந்தும் குணமானார்கள்.

நான் ஒரு விசுவாச ஜீவியத்தை வாழ்வதால் மிகுந்த சந்தோஷமாய் இருக்கிறேன். எங்களை குணமாக்கிய கர்த்தருக்கு எல்லா நன்றிகளையும் நான் செலுத்துகிறேன். அல்லேலூயா!

GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com